மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 60/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : தியாகராஜன்(பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

28.02.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி 1மீண்டும் அழைத்ததின் பேரில் வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி –

1. நான் சவுதி அரேபியில் வேலை பார்த்ததாக சொல்வது எல்லாம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் பவானி அம்மாளுக்கு பாத்தியம் என்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். பவானி அம்மாள் 1996ல் எனது மனைவிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். பிவாசாஆ1ன் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது நெருப்பில் எறிந்துவிட்டது. அதனால் தாக்கல் செய்யவில்லை.

2. பிவாசாஆ1ல் உள்ளதுதான் தாவா சொத்து என்றால் சரிதான். பிவாசாஆ1ல் சர்வே எண்ணும், விஸ்தீரணமும் சரியாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ1ன் பத்திரத்தின் சார்பதிவக நகலை வாசாஆ1 ஆக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வாசாஆ1ன் மூலமாக கிரையம் பெற்ற சொத்தை தான் எனது மனைவி சின்னசாமிக்கும், எட்டப்பனுக்கும் கிரையம் கொடுத்தார் என்றால் அது வேறு சொத்து ஆகும். அது வேறு சொத்து என்று எதை வைத்து சொல்கிறீர்கள் என்றால் நான்குமாலை படித்து காட்டி சொத்தை எழுதி கொடுத்தாக ராமலட்சுமி தொலைபேசியில் எனக்கு தகவல் சொன்னதை வைத்து சொல்கிறேன்.

3. வாசாஆ2ல் உள்ள நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியும். குப்புசாமி ஐயர் நிலத்திற்கும் தெற்கு, ரங்கன் நாயக்கர் நிலத்திற்கும் வடக்கு, நாகலிங்க நாயக்கருக்கு நிலத்திற்கும் மேற்கு ரோட்டிற்கு கிழக்கு. எனது மனைவியிடம் நான்குமாலை படித்து காண்பித்து தான் கிரையம் பெற்றார்கள் என்ற விபரத்தை எனது மனைவி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சரிதான்.வாசாஆ 1 மற்றும் பிவாசாஆ 1ல் உள்ள தாவா சொத்தின் சரியான நான்குமால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 2 பத்திரத்தில் முன்ஆவணமாக பிவாசாஆ 1 மற்றும் வாசாஆ 1 ஆவணத்தை தான் குறிப்பிட்டு அதன்மூலம் பவானி அம்மாள் ராமலட்சுமிக்கு கிரையம் பெற்ற சொத்தைதான் வாசாஆ 2ன் மூலமாக சின்னசாமி மற்றும் எட்டப்பனுக்கு கிரையம் கொடுத்தாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமலட்சுமி சின்னசாமிக்கும் எட்டப்பனுக்கும் கிரையம் கொடுத்தது பவானி அம்மாளிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்துதான் என்றால் சரியல்ல. ஏனென்றால் வாசாஆ 1ல் கிரையம் பெற்ற சொத்து எனக்காகதான் கிரையம் பெறப்பட்டது.

4. மேற்படி ராமலட்சுமி கிரையம் பெற்ற சொத்திற்கு யார் பணம் கொடுத்தார்கள் என்றால் நான் தான் பணம் கொடுத்தேன். எப்படி பணம் கொடுத்தீர்கள் என்றால் நான் 1995ம் வருடம் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு 1996ம் வருடம் நேரடியாக பணம் கொடுத்தேன். 1995ம் வருடம் சவுதி அரேபியாவில் இருந்து வந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். சவுதி அரேபியாவில் இருந்து வரும்போது கிரையத்திற்காக தொகையை முழுவதுமாக கொண்டு வந்தேன். நான் 1996ம் வருடம் ரூ.40 ஆயிரத்திற்கு கிரையம் என் மனைவி பெயரில் வாங்கினேன்.

5. கணவனுக்காக மனைவி பெயரில் வாங்கினாலும், மனைவிக்காக கணவன் பெயரில் வாங்கினாலும் பினாமி ஒழிப்பு சட்டத்தின் கீழ் யார் பெயரில் கிரையம் பெறப்பட்டதோ அவர்களுக்குதான் சொத்து பாத்தியம் என்றால் எனக்கு அது பற்றி சரியாக தெரியாது. 2011ம் வருடம் எனது மனைவியிடம் இருந்து கிரையம் பெற்ற சின்னசாமி, எட்டப்பனும் வாசாஆ 3ன் மூலம் இவ்வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் இருக்கலாம். வாசாஆ 3ல் உள்ள சரத்துக்களில் சின்னசாமியும், எட்டப்பனும் வாசாஆ 2ன் மூலம் எனது மனைவி ராமலட்சுமியிடம்இருந்து கிரையம் பெற்ற சொத்தை தான் வாசாஆ 3ன் மூலம் கிரையம் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். எனது மனைவி கிரையம் வாங்கிய வாசாஆ 1 பத்திரத்திலும் வாதி கருப்பையா கிரையம் வாங்கிய வாசாஆ 3 பத்திரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமால்கள் ஒரே நான்குமால்கள்தான் என்றால் இருக்கலாம்.

6. எனது மனைவி கிரையம் வாசாஆ1ல் உள்ள நான்குமால்கள் தாவா சொத்திற்குரிய நான்குமால்களும் ஒன்றுதான் என்றால் சரிதான். எனது மனைவி சின்னசாமிக்கும், எட்டப்பனுக்கும் எந்த சொத்து கிரையம் கொடுக்கவேண்டும் என்று எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அது வேறு ஒரு கரிசல் காடு. எனது மனைவி கையொப்பம் செய்த சம்மத பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பவானி அம்மாள் சின்னசாமிக்கும், எட்டப்பனுக்கும் கரிசல்காடு எழுதி கொடுத்த பத்திரத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது மனைவி ராமலட்சுமியை விசாரித்தால்தான் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)